2025 அக்டோபர் மாதம் 14 – ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

O.S. நெம்பர் : 108/2024

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 – ஆம் தேதி செவ்வாய்கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1–வது நபரின் வாக்குமூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.C.லதா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – கிருஷ்ணப்பிரியா |
| தந்தை பெயர்: | ராஜாராம் |
| ஊர்: | அல்லிநகரம், தற்போது – திருச்சி |
| வட்டம்: | திருச்சி |
| மாவட்டம்: | திருச்சி |
| தொழில்: | இல்லத்தரசி |
| வயது : | 32 |

14.10.2025

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**முதல் விசாரணை**–

நான் இந்த வழக்கில் 1ம் வாதியாவேன். 2, 3 வாதிகளுக்காகவும் சேர்த்து வழக்கு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை வாதிகள் தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன் அவற்றை வாதிகள் தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டி பிரார்த்திக்கிறேன்.

| | |
|---|---|
| 1. | 27.01.1979 ம் தேதியிட்டு எங்களின் பாட்டானாரும்அவர்களின் குடும்பத்தார்களும் சேர்ந்து எழுதிக்கொடுத்த பதிவு பாகப்பிரிவினை பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் (ஆவண எண்.187/1979) – **வா.சா.ஆ.1** |

| | |
|---|---|
| 2. | எங்களின் தாத்தா வீராச்சாமி என்பவர் கடந்த 11.04.2008ம் தேதி இறந்ததை காட்டக்கூடிய இறப்புச் சான்றிதழ் உண்மை நகல் – **வா.சா.ஆ.2** |
| 3. | எங்களின் தாத்தா இறந்துபோன வீராச்சாமி என்பவருக்கு வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழின் உண்மை நகல் – **வா.சா.ஆ.3** |
| 4. | 05.09.2020ம் தேதியிட்டு எங்களின் பாட்டி சுசீலா என்பவர் 05.09.2020ம் தேதி இறந்ததை காட்டக்கூடிய இறப்புச்சான்றிதழின் உண்மை நகல் – **வா.சா.ஆ.4** |
| 5. | எங்களின் பாட்டி இறந்துபோன சுசீலா என்பவருக்கு வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழின் இணையதள நகல் – **வா.சா.ஆ.5** |
| 6. | எங்களின் தந்தை ராஜாராம் என்பவர் 24.06.2022ம் தேதி இறந்ததை காட்டக்கூடிய இறப்புச்சான்றிதழின் இணையதள நகல் – **வா.சா.ஆ.6** |
| 7. | 15.07.2022ம் தேதியிட்டு எங்களின் தந்தை இறந்துபோன ராஜாராம் என்பவருக்கு வழங்கப்பட்ட வாரிசுச்சான்றிதழின் இணையதள நகல் – **வா.சா.ஆ.7** |
| 8. | 29.12.2022ம் தேதியிட்டு வீராச்சாமி என்பவர் தேனி அல்லிநகரம் நகராட்சியில் குடிநீர் கட்டணம் செலுத்தியதற்கான இரசீது அசல் – **வா.சா.ஆ.8** |
| 9. | 04.02.2023ம் தேதியிட்டு வீராச்சாமி என்பவர் தேனி அல்லிநகரம் நகராட்சியில் செலுத்திய சொத்து வரி செலுத்தியதற்கான இரசீது அசல் – **வா.சா.ஆ.9** |
| 10. | 13.09.2021, 12.12.2021 ஆகிய தேதிகளிட்டு வீராச்சாமி என்பவர் மின்இணைப்பு எண்.05–502–013–303–க்கு செலுத்திய மின்கட்டண இரசீதுகள் (எண்ணம் 2) அசல் – **வா.சா.ஆ.10** |
| 11. | பிராது 1, 2 லக்க சொத்திற்கான அரசு வழிகாட்டு மதிப்பீட்டு சான்று இணையதள நகல் – **வா.சா.ஆ.11** |
| 12. | பிராது 1, 2 லக்க சொத்திற்கான தேனி, JD Builders and Constructions வழங்கிய கட்டிட மதிப்பு சான்றிதழ் (10 தாள்கள் அடங்கியது) அசல் – **வா.சா.ஆ.12** |
| 13. | 08.07.2010ம் தேதியிட்டு எனது பாட்டி சுசீலா என்பவருக்கு கருப்பையா வகையறா பிராது 3வது லக்க சொத்தைப் பொறுத்து எழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஆவணத்தின் அசல் (ஆவண எண்.3058/2010) – **வா.சா.ஆ.13** |

| | |
|---|---|
| 14. | பிராது 3 வது லக்க சொத்திற்கான அரசு வழிகாட்டு மதிப்பீட்டு சான்று இணையதள நகல் – **வா.சா.ஆ.14** |
| 15. | 23.02.2024 ம் தேதியிட்டு நாங்கள் எங்களின் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் – **வா.சா.ஆ.15** |
| 16. | 24.02.2024, 26.02.2024 ஆகிய தேதிகளிட்டு நாங்கள் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கான அஞ்சலக இரசீது அசல் மற்றும் மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் – **வா.சா.ஆ.16** |
| 17. | 17.03.2024 ம் தேதியிட்டு பிரதிவாதி அவரின் வழக்கறிஞர் மூலம் எங்களின் வழக்கறிஞருக்கு பதில் அறிவிப்பு சார்பு நகல் – **வா.சா.ஆ.17** |

நான் பிராதில் கோரியவாறு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டி பிரார்த்திக்கிறேன்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:– பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 14.10.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.14 19:21:49 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
14.10.2025.